# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2323/29 - 2023 මාර්තු මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.03.16

*2323/29 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**08 ஆவது திருத்தம்**

இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு

*கீழே I ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2010 செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய மற்றும் 1670/33 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிககப்பட்ட இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழுள்ள II ஆம் பகுதியில் காட்டப்பட்டுள்ளவாறு மீள திருத்தியமைக்கப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி*

**தனுஜா முருகேசன்,**
பதில் செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

இலங்கைச் சுங்கம்,
கொழும்பு 11,
*2023, மாச்சு 10.*

I **ஆம் பகுதி**

திருத்த இலக்கம் 01 - 2011, மாச்சு மாதம் 01 ஆந் திகதிய மற்றும் 1695/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 02 - 2014, யூன் மாதம் 06 ஆந் திகதிய மற்றும் 1865/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 03 - 2016, ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய மற்றும் 1981/99 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 04 - 2018, மே மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 2070/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 05 - 2019, ஓகத்து மாதம் 22 ஆந் திகதிய மற்றும் 2137/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 06 - 2021, ஏப்பிரல் மாதம் 27 ஆந் திகதிய மற்றும் 2225/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்
திருத்த இலக்கம் 07 - 2011, யூலை மாதம் 12 ஆந் திகதிய மற்றும் 2236/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

II **ஆம் பகுதி**

05. சம்பளம்

5.1 சம்பளக் குறியீட்டிலக்கம் : சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் - SL - 3 - 2016
நிறைவேற்றுத் தரம் - SL - 1 - 2016

5.2 சம்பள அளவுத்திட்டம் : சிரேஷ்ட நிறைவேற்றுத் தரம் - SL - 3 - 2016 - ரூபா. 88,000 - 12 x ரூபா. 2,700 ரூபா. 120,400
நிறைவேற்றுத் தரம் - SL - 1 - 2016 - ரூபா. 47,615 - 10 x ரூபா. 1,335 - 8 x ரூபா. 1,630 - 17 x ரூபா. 2,170 - ரூபா. 110,895

5.3 தர முறைமைக்குரிய அடிப்படைச் சம்பளப் படிமுறை :

| தரம் | சம்பள விபரம் | அடிப்படைச்சம்பளம் (மாதாந்தம்) |
|---|---|---|
| III ஆந் தரம் | 1 ஆந் தரம் (SL -1 - 2016) | ரூபா 47,615 |
| II ஆந் தரம் | 12 (SL -1 - 2016) | ரூபா 62,595 |
| I ஆந் தரம் | 20 (SL -1 - 2016) | ரூபா 76,175 |
| விசேட தரம் | 1 (SL -3 - 2016) | ரூபா 88,000 |

06. உத்தியோகத்தர் வகுதிக்குரிய பதவி/பதவிகள்

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் பதவி எண்ணிக்கை :

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| III/ II | 1520 | • தம்மிடம் குறித்து ஒப்படைக்கப்படுகின்ற விடயப்பரப்பிற்கு ஏற்புடையதாக நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகளுக்கு அமைவானதாக நிறுவனத்தின் கணக்கீட்டு முறைமையை முறையாகப் பேணுதல், தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய தகவல்களை அறிக்கையிடல், அதனுடன் தொடர்புடைய கணக்கீடு மற்றும் ஏற்புடைய தகவல்களடங்கிய அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை இற்றைப்படுத்திப் பேணுதல் மற்றும் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் தொடர்பான |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| | | பணிகளை மேற்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை செயற்படுத்தல், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உதவுதல், இணைந்த நிறுவனங்களின் கணக்கு அலுவல்கள் தொடர்பாக ஒப்படைக்கப்படும் பணிகள் மற்றும் நிறுவனத்தின் கணக்கீட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய பிற பணிகள். |
| I | 489 | • வினைத்திறனான மற்றும் பயனுள்ள நிதி முகாமைத்துவ முறைமையினை செயற்படுத்தல், நிதிசார் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும், நிதித் திட்டமிடலும் வரவு செலவுத் திட்டமும், கணக்கீடும் அறிக்கையிடலும், உள்ளகக் கட்டுப்பாடு, சொத்துக்களின் முகாமைத்துவம், பெறுகைகள் முகாமைத்துவம், வெளிநாட்டுதவிக் கருத்திட்டங்கள் பற்றிய நிதி முகாமைத்துவ ஆலோசனைகளும் கண்காணிப்பும், நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல், நிதிப் பொறுப்புக்கள் மற்றும் நிதிச்செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டிய விடயங்கள் தொடர்பாக நிறுவனத் தலைவருக்கு உதவுதல், இணைந்த நிறுவனங்களின் நிதி முகாமைத்துவ வழிகாட்டல்கள், கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல், நிதி முகாமைத்துவப் பணியாட்டொகுதிக்கான பயிற்சி. |
| விசேட | 93 | |

குறிப்பு : அரச சேவையின் தேவைப்பாடுகளுக்கேற்ப அவ்வப்போது இந்த உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை மாறுபட முடியும்.

6.2 இணைந்த பதவியணியினரின் எண்ணிக்கை - III/II ஆந் தரத்தில் - 1520
I ஆந் தரத்தில் - 489
மொத்தம் - 2009

ஒரு தரத்திலிருந்து மற்றைய தரத்திற்கு தரமுயர்த்தும் பணிக்காக III, II மற்றும் I ஆம் தரங்கள் அனைத்தும் இணைந்த பதவியணியினரின் எண்ணிக்கையில் உள்ளடங்குவதாகக் கருதப்படும்.

07. ஆட்சேர்ப்பு முறை

7.3 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கள்

7.3. 2.3 அனுபவம் :

I. மேற்படி 7.2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள எந்தவொரு தகைமையுடனும் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதிக்கு அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, ஓய்வூதியத்துடன் கூடியதாக பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் சம்பளக் குறியீட்டிலக்கம் MN - 01 - 2016 அல்லது அதற்குச் சமனான அல்லது அதற்கு மேற்பட்ட குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் சேவையில் அல்லது பதவியில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

II. தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதிக்கு அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, ஓய்வூதியத்துடன் கூடியதாக பொது நிர்வாக சுற்றிக்கை 03/2016 இன் சம்பளக் குறியீட்டிலக்கம் MN - 1 - 2016

அல்லது அதற்கு மேற்பட்ட MN சம்பள குறியீட்டிலக்கத்தின் கீழ் அல்லது SL - 1 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் பதவியில் அல்லது பதவிகளில் பத்து (10) வருடத்திற்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

10.3 தரம் I இலிருந்து விசேட தரத்துக்குப் பதவியுயர்த்தல்

10.3.1 பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் :

i. 5 ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

ii. பதவியுயர்த்தப்படும் திகதியில் முதலாம் தரத்தில் ஐந்து (5) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் முதலாம் தரத்துக்குப் பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

iii. பதவியுயர்த்தப்படும் திகதியில் பதினெட்டு (18) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. பதவியுயர்த்தப்படும் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருடங்களில் வருடாந்த செயலாற்றுகையானது திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் இருத்தல்.

v. பதவியுயர்த்தப்படும் திகதிக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

vi. மூன்றாம் வினைத்திறன் காண் தடைதாண்டலை குறித்த திகதிக்குப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது விடுவிக்கப்பட்டிருத்தல்.

10.3.2 பதவியுயர்த்தப்படும் முறை

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவரை ஒவ்வொரு வருடத்தினதும் சனவரி மாதம் 01 ஆந் திகதி மற்றும் யூலை மாதம் 01 ஆந் திகதிக்கு நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தும் நடவடிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

குறிப்பு :

01. வெற்றிட எண்ணிக்கை கணக்கிடப்படும் திகதியில் தரம் I இல் உள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கு ஏற்ப வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கிற்கு மேற்படாத 10.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

02. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் உத்தியோகத்தர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சேவை மூப்பினைப் பரீட்சித்தல் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

03. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளுக்கு ஏற்ப வெற்றிடங்கள்கணக்கிடப்படும் திகதிக்கு தரம் 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு ஒழுங்கின் படி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விசேட தரத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்குச் சமனான உத்தியோகத்தர்கள் விசேட தரத்துக்குப் பதவியுயர்த்தப்படுவார்கள்.

14. வரைவிலக்கணம்

(vi). “திருப்திகரமான சேவைக் காலம்” என்பது 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் XXII ஆம் அத்தியாயத்தின் XXXVIII ஆம் பிரிவின் படி வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

(x). ‘‘செயலூக்கமுள்ள சேவைக் காலம்’’ என்பது 2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.1214 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் XXII ஆம் அத்தியாயத்தின் XXX ஆம் பிரிவின் படி வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

(xi). இப்பிரிவு நீக்கப்படுகிறது.

(xii). இப்பிரிவு நீக்கப்படுகிறது.

EOG 03-0186